2005 மார்ச் 29]

238—

நெல் கொள்முதல்

***2150—திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எண்ணிக்கை குறைவான நெல் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வந்தால், அதனைக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் குறைவான எண்ணிக்கையில் வேளாண் விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டு வந்தாலும், விற்பனை செய்து தரப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாகக் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வினா எண் 239, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

239—

பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி

***30348—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ராதாபுரம் வட்டம், பெட்டைக்குளம் ஊரில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வாழ்வில்